செய்தி வெளியீடு எண்: 572

# அரசு செய்தி வெளியீடு – 8.7.2010

7.7.2010 அன்று இரவு கடலில் மீன் பிடிக்கச் சென்ற நாகப்பட்டினம் மாவட்டம், வெல்லப்பள்ளம் கிராமத்தைச் சேர்ந்த செல்லப்பன் என்ற மீனவர், இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டு உயிரிழந்த செய்தியினை அறிந்த முதலமைச்சர் அவர்கள் செல்லப்பன் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டதோடு, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாயினை வழங்கிட ஆணை பிறப்பித்துள்ளார். இந்த நிதி நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக செல்லப்பன் குடும்பத்தினருக்கு உடனடியாக வழங்கப்படும்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9